| Headline | HIV spread after receive blood | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 16 Oct 2011 | Color | Full Color |
| Section | News | Circulation | 45,000 |
| Page No | 13 | Readership | 124,000 |
| Language | Tamil | ArticleSize | 153 cm² |
| Journalist | N/A | AdValue | RM 705 |
| Frequency | Daily | PR Value | RM 2,114 |



# இரத்தம் ஏற்றப்பட்டபின் எச்.ஐ.வி. தொற்றியதா? மகள் புகார்



*லீ திக் தியான் தன் தாயாரின் மருத்துவச் சான்றிதழைக் காட்டுகிறார். அவருடன் பாசீர் பிஞ்சி சட்டமன்ற உறுப்பினர் தோமஸ் சூ.*

**ஈப்போ, அக். 16-**

56 வயதான சிறுநீரக நோயாளி ஒருவர், தெலுக் இந்தான் மருத்துவமனையில் தனக்கு இரத்தம் ஏற்றப் பட்ட பிறகு தனக்கு எச்.ஐ.வி.நோய் தொற்றியது எப்படி எனக் கேள்வி எழுப்புகின்றார்.

அந்த நோயாளியின் மகள் லீ திக் தியான் (வ்யது 36) தன் தாயார் வூன் ஆ தாய், என்பவருக்கு இரண்டு பைண்ட் இரத்தம் ஏற்றப்பட்டது என்றும், ஜூலை 21க்கும் 23க்கும் இடையில் இந்த இரத்தம் ஏற்றப்பட்ட பிறகு ஆகஸ்ட் 15ஆம் தேதி சிறு அறுவை சிகிச்சைக்காக மலாயாப் பல்கலைக்கழக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட போது செய்த சோதனையில் அவருக்கு எச்.ஐ.வி. கிருமி தொற்றியிருப்பது தெரியவந்தது என்றும் தெரிவித்தார். பாசீர் பிஞ்சி சட்டமன்ற உறுப்பினர் கூட்டிய பத்திரிகையாளர் கூட்டத்தில் அவர் இதைத் தெரிவித்தார். "அந்தச் சோதனையைச் செய்த டாக்டர் தொழில் தர்மம் அற்றவர். என் தாயார் தனது நடத்தையால் இக்கிருமி தொற்றியிருக்கலாம் என்றார் எனவும் அவர் தெரிவித்தார். இது பற்றி விசாரிக்கப்படும் என மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

Powered by: MediaBanc Be informed